மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திருமதி. C. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையி யல் நீதி பதி .

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் கார்த்திகைத் திங்கள் 24 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.327/2021-ல்**

**அசல் வழக்கு எண். 31/2020**

சண்முகசுந்தரம் ...மனுதாரர்/ வாதி

**// எதிர்//**

கலா ....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 18.11.2021 தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T. ஸ்ரீதரன் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P.ராதா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் உரிய திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 6, விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வழக்குரையில் ஆவணங்கள் 2 மற்றும் 3-ல் 20.07.1975 என்ற தேதிக்கு பதிலாக 03.07.1975 மற்றும் 26.06.1975 என்று தேதிகள் தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது. மேற்படி தவறு தெரிந்தவுடன் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்குரையில் திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை. மேற்படி திருத்தத்தை செய்யாதபட்சத்தில் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். எனவே, வழக்குரையில் திருத்தம் செய்து கொள்ள இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரர் தரப்பில் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர்/வாதி அசல் வழக்குரை தாக்கல் செய்த தேதியிலேயே அவற்றில் உள்ள ஆவணத்தில் தேதி தவறாகவும், தாக்கல் செய்த ஆவணங்களுக்கு முரணாகவும் இருந்து வருகிறது. வழக்கில் 02.09.2021 தேதியில் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள நிரூபண அபிடவிட்டிலும் வழக்கின் ஆவணத்தில் கண்டுள்ள தவறான தேதியை குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதல் விசாரணையின்போது, தான் தாக்கல் செய்துள்ள கிரய ஆவணத்தின் தேதி தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை தெரிந்துக்கொண்ட பின்னர் தான் செய்துள்ள தவறை காலம் கடந்து அலட்சியமாக இருந்துவிட்டு தற்போது மேற்படி தவறுகளை திருத்தம் செய்து கொள்ள மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல்

வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் வழக்குரையில் ஆவணங்கள் 2 மற்றும் 3-ல் 20.07.1975 என்ற தேதிக்கு பதிலாக 03.07.1975 மற்றும் 26.06.1975 என்று தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது என்றும், வழக்குரையில் திருத்தம்செய்து கொள்ள இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.**எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்/வாதி அசல் வழக்குரை தாக்கல் செய்த தேதியிலேயே அவற்றில் உள்ள ஆவணத்தில் தேதி தவறாகவும், தாக்கல் செய்த ஆவணங்களுக்கு முரணாகவும் இருந்து வருகிறது என்றும், வழக்கில் 02.09.2021 தேதியில் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள நிரூபண அபிடவிட்டிலும் வழக்கின் ஆவணத்தில் கண்டுள்ள தவறான தேதியை குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், முதல் விசாரணையின்போது தான் தாக்கல் செய்துள்ள கிரய ஆவணத்தின் தேதி தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை தெரிந்துக்கொண்ட பின்னர் தான் செய்துள்ள தவறை காலம் கடந்து அலட்சியமாக இருந்துவிட்டு தற்போது மேற்படி தவறுகளை திருத்தம் செய்து கொள்ள மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

**இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>பிரச்சனை</u>** :-

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள்

குறியீடு செய்யப்படவில்லை.

**3.** அசல் வழக்கானது வாதியின் சட்டப்படியான அமைதியான அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வரும் தாவாசொத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எந்த வகையிலும் அத்து மீறி பிரவேசிக்காமல் இருக்கும்பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பு தொடர் விசாரணைக்காக போடப்பட்டிருந்தபோது இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவினை பரிசீலிக்கையில், அசல் வழக்கானது வாதி தரப்பு விசாரணையின்போது வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தின் தேதி தவறுதலாக வழக்குரையில் அச்சிடப்பட்டுள்ளதாகவும் அதனை திருத்திக் கொள்ள அசல் வழக்குரையில் திருத்தம் செய்யவேண்டும் என்றும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரிய வருகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணையை இந்நீதிமன்றம் கருத்திற் கொள்கிறது. வழக்குரையில் ஆவணங்கள் 2 மற்றும் 3 ல் தேதி 20.07.1995 என்பதற்கு பதிலாக 03.07.1975 மற்றும் 16.06.1975 என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ள அசல் வழக்குரையில் திருத்தம் செய்யப்படாவிட்டால் வாதிக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்று மனுதாரர் தெரிவித்துள்ள சங்கதியானது ஏற்கத்தக்க ஒன்றாகவே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இத்திருத்தத்தை மேற்கொள்வதால் வழக்கின் வழக்கெழுமூலமோ, வழக்கின் தன்மையோ எவ்விதத்திலும் மாறாது என்றும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்பட போவதில்லை. வழக்குரை திருத்தப்பட்டால் அது குறித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கு நடத்துவதற்கு

எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு போதிய வாய்ப்புண்டு. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (10.12.2021) அவையறியப்பகரப்பட்டது.

S/d. C. Kalaivani.,)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

**இரு தரப்பிலும்** : இல்லை

S/d. C. Kalaivani.,)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.